# பரிசுத்த ஐக்கியம் ( இராப்போஜனம், திரு விருந்து)

திரு விருந்து என்பது, கடைபிடிக்கப்பட வேண்டிய ஒரு சடங்காச்சாரம் அல்ல; பெற்றுக்கொள்ள வேண்டிய ஒரு ஆசீர்வாதம் ( ஜோசப் பிரின்ஸ்).

ஐக்கியம்: கிரே:கொய்னூனியா - இயேசுவின் மரணத்தினால், அவரது சரீரம் மற்றும் இரத்தத்தின் மூலமாக நமக்கு கிடைத்திருக்கும் தத்ரூபமான ஆசீர்வாதங்களை பகிர்ந்து கொள்வது ( வைன்ஸ்).

இவ்வார்த்தைக்கான மற்றொரு அர்த்தம் - கூட்டாய்மை - இரண்டு அல்லது மேற்பட்டவர்களுக்கு இடையில் இருக்கும் உறவின் மூலமாக தங்கள் பொதுவான சித்தத்தை பகிர்ந்து கொள்ளுதலும் பங்கெடுத்தலும். ( வின்சென்ட்).

*மத் 26:26 அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார். 27 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;*

“அவர்கள் போஜனம் பண்ணுகையில்” - அதாவது பஸ்கா பண்டிகையின் ஆகாரத்தை போஜனம் பண்ணும்போது.

### வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 4 முக்கிய புசிப்புகள்.

1. நன்மை தீமை அறியத்தக்க மரத்தின் கனியை புசித்தல் *( ஆதி 3:6 ).*
2. பஸ்கா ஆகாரத்தை புசித்தல் *( யாத் 12 ).*
3. கர்த்தருடைய திருவிருந்தை புசித்தல் *( மத் 26:26-28 ).*
4. ஆட்டுக்குட்டியானவருடைய கல்யான விருந்தை புசித்தல் *( வெளி 19:9 ).*

## பஸ்காவும் பரிசுத்த ஐக்கியமும்

*(யாத் 12: மத் 26:26-28; மாற்கு 14:22-25; லூக்கா 22:14-20; 1 கொரி 10:14-21; 11:20-31).*

முதல் திருவிருந்து, பஸ்கா ஆசாரிப்பு தினத்தன்றுதான் துவக்கப்பட்டது.

பஸ்கா ஆசரிப்பின் மூலமாக பழைய உடன்படிக்கை துவக்கப்பட்டது.
திருவிருந்து ஆசரிப்பின் மூலமாக புதிய உடன்படிக்கை துவக்கப்பட்டது.
பஸ்கா ஆட்டுக்குட்டி, இயேசு கிறிஸ்துவின் நிழலாக இருந்தது *( யோவான் 1:29,36; 191-4; அப் 8:32-35; 1 கொரி 15:3-4; 1 பேதுரு 1:19-20; வெளி 5:6-9,12).*

*1 கொரி 5:7 ஆகையால், நீங்கள் புளிப்பில்லாதவர்களாயிருக்கிறபடியே, புதிதாய்ப் பிசைந்த மாவாயிருக்கும்படிக்கு, பழைய புளித்தமாவைப் புறம்பே கழித்துப்போடுங்கள். ஏனெனில் நம்முடைய பஸ்காவாகிய கிறிஸ்து நமக்காகப் பலியிடப்பட்டிருக்கிறாரே.*

பஸ்கா ஆட்டுக்குட்டி பழுதற்றதாக இருக்க வேண்டும் ( யாத் 12:5 ).
இயேசு கிறிஸ்து தன்னில் ஒரு பழுதற்றவராக( பாவம், குறை) இருந்தார் ( எபி 4:15).

பஸ்கா ஆட்டுக்குட்டியானது நிசான் மாதத்தின் 14 ஆம் தியதி “மாலையில்” கொல்லப்பட வேண்டும் ( யாத் 12:6 ).
இயேசு கிறிஸ்து “மாலையில்” தான் தன் ஜீவனை விட்டார். ( யோவான் 19:14 ல்தான் இயேசு கிறிஸ்து யூதர்களிடம் ஒப்படைக்கப்பட்டார்).

பஸ்கா உணவில் ஒன்றும் மீதி வைக்காமல் புசிக்கப்பட வேண்டும் (யாத் 12: 5 ). இயேசு கிறிஸ்து தன்னை முழுவதும் புசிக்கும்படியாக சொன்னார் ( யோவான் 6:53-58 ).

*யோவான் 6:53 அதற்கு இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் மனுஷகுமாரனுடைய மாம்சத்தைப் புசியாமலும், அவருடைய இரத்தத்தைப் பானம்பண்ணாமலும் இருந்தால் உங்களுக்குள்ளே ஜீவனில்லை என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*
*54 என் மாம்சத்தைப் புசித்து, என் இரத்தத்தைப் பானம்பண்ணுகிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; நான் அவனைக் கடைசிநாளில் எழுப்புவேன்.*

**இயேசுவின் மாம்சத்தை புசித்து, அவரது இரத்தத்தை பானம் பண்ணுவது என்றால் என்ன?** நாம் இயேசுவின் மேல் நம் முழு விசுவாசத்தையும் வைத்து, நாம் தேவனுக்கு முன்பாக நிற்பதற்கு இயேசுவின் மீட்பின் கிரியையில் முழுமையாக சார்ந்திருப்பது ( ஆண்ரு வாமக்).

விசுவாசத்தால் இயேசுகிறிஸ்துவை ஆவிக்குரிய விதத்தில் முழுவதுமாக நமதாக்கிக்கொள்ளுதல் *( யோவான் 6:47)* ( ராபர்ட்சன் ).

பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் வீட்டு வாசலின் நிலைக்கால்கள், மற்றும் மேல்சட்டத்தில் பூசப்பட்டிருக்க வேண்டும் *( யாத் 12:7 ).* சங்கார தூதன் அதைப்பார்த்தால்தான் கடந்து செல்வார். இயேசு கிறிஸ்துவை நமது சொந்த இரட்சகராக்கிக்கொள்ளும்போது, அவரது இரத்தம் நம் வாழ்க்கையில் பூசப்படுகிறது. அதைப்பார்த்து சாத்தான் நம்மை கடந்து சென்றே ஆக வேண்டும். நாம் மரணத்தில் இருந்து ஜீவனுக்குள்ளாக கடந்து வந்திருக்கிறோம். *யோவான் 5:24 என் வசனத்தைக் கேட்டு, என்னை அனுப்பினவரை விசுவாசிக்கிறவனுக்கு நித்தியஜீவன் உண்டு; அவன் ஆக்கினைத் தீர்ப்புக்குட்படாமல், மரணத்தைவிட்டு நீங்கி, ஜீவனுக்குட்பட்டிருக்கிறான் என்று மெய்யாகவே மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்.*

பஸ்கா ஆசரிப்பு இஸ்ரவேலருக்கு நித்தியமானது *( யாத் 12:14,17,24; எசே 45:17 ).* திருவிருந்து நமக்கு நித்தியமானது. தேவனுடைய ராஜ்யத்தில் இயேசுவும் நாமும் அதில் நித்தியமாக பங்கு கொள்வோம் *( மத் 26:29; மாற்கு 14:25; லூக்கா 22:18,30 ).*

இயேசு கிறிஸ்துவின் வருகைக்கு பிறகு அவரோடு நாம் இதில் பங்கு கொள்வோம். அப்போது இது ஒரு புதிய காரியமாக இருக்கும்.
*1 கொரி 11:26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

## பஸ்காவும் ஆரோக்கியமும்

*சங் 105:37 அப்பொழுது அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப்பண்ணினார்; அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை.* பஸ்கா ஆட்டுக்குட்டி இயேசுவை குறிக்கிறது. இயேசுவின் பிராயச்சித்த பலி நமக்கு ஆரோக்கியத்தை கொண்டு வந்தது. அது போல, சுமார் 30 லட்சம் இஸ்ரவேல் ஜனம், எகிப்தில் இருந்து புறப்படுமுன்பு, பஸ்காவை புசித்த போது, அவர்கள் எல்லோரும் குணமடைந்து பெலமுள்ளவர்களாக யாத்திரையை தொடங்கினார்கள். பஸ்கா அவர்களுக்கு ஆரோக்கியத்தை கொடுத்தது.
*யாத் 23:25 உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். உபா 7:15 கர்த்தர் சகல நோய்களையும் உன்னை விட்டு விலக்குவார்; உனக்குத் தெரிந்திருக்கிற எகிப்தியரின் கொடிய ரோகங்களில் ஒன்றும் உன்மேல் வரப்பண்ணாமல், உன்னைப் பகைக்கிற யாவர்மேலும் அவைகளை வரப்பண்ணுவார்.*

## பஸ்காவும் பாவ மன்னிப்பும்

*எபி 9:22 நியாயப்பிரமாணத்தின்படி கொஞ்சங்குறைய எல்லாம் இரத்தத்தினாலே சுத்திகரிக்கப்படும்; இரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது.*

ஏன் இரத்தம்? *லேவி 17:11 மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவிற்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே.*

### பாவ மன்னிப்பு

*யாத் 12:23 கர்த்தர் எகிப்தியரை அதம்பண்ணுகிறதற்குக் கடந்துவருவார்; நிலையின் மேற்சட்டத்திலும் வாசலின் நிலைக்கால்கள் இரண்டிலும் அந்த இரத்தத்தைக் காணும்போது, கர்த்தர் சங்காரக்காரனை உங்கள் வீடுகளில் உங்களை அதம்பண்ணுகிறதற்கு வரவொட்டாமல், வாசற்படியை விலகிக் கடந்துபோவார்.*

கர்த்தர் இரத்தத்ததை பார்க்கிறார் - கடந்து போகிறார் - பஸ்கா (கடந்து செல்லுதல்) = பாவ மன்னிப்பு.

கர்த்தர் எகிப்தினூடே கடந்து செல்லும்போது, சங்கார தூதன் இஸ்ரவேலரின் வீட்டு வாசல் நிலைகளில் இரத்த்த்தை காணும்போது, அங்கு மரணம் - இரத்தம் சிந்துதல் - பஸ்கா ஆட்டுக்குட்டியின் மரணம் சம்பவித்திருக்கிறது என்று அறிந்து கொள்ளுகிறார். அதனால் அவர்களை அழிக்காமல் கடந்து செல்லுகிறார்.

## இயேசுவின் சரீரமும் ( நமது பஸ்கா ஆட்டுக்குட்டி ) நமது ஆரோக்கியமும்

*ஏசாயா 53:4 மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ, அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்.*

*5 நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.*

*மத் 8:17 அவர் தாமே நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று, ஏசாயா தீர்க்கதரிசியினால் உரைக்கப்பட்டது நிறைவேறும்படி இப்படி நடந்தது.*

*1 பேதுரு 2:24 நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர் தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்; அவருடைய தழும்புகளால் குணமானீர்கள்.*

இயேசு கிறிஸ்து தன்னுடைய ஒரு தவறுகளுக்காகவும் பாடுபடவில்லை. அவரது பாடுகள் எல்லாம் நம்நிமித்தமே. மத்தேயு தன் நிருபத்தில் 8:17 ல், ஏசாயா 53:4 ஐ குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவியின் ஏவுதலினால், அவர், ***“பாடுகளை ஏற்றுக்கொண்டு”*** என்பதற்கு பதிலாக “***பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு”*** என்றும், “***துக்கங்களைச் சுமந்தார்”*** என்பதற்கு பதிலாக ***“நோய்களைச் சுமந்தார்”*** என்றும் குறிப்பிடுகிறார்.

ஏசாயாயில் குறிப்பிடப்பட்டுள்ள **“பாடுகள்”** என்ற வார்த்தைக்கான எபிரேய பதம் **“சோலை”** என்பதாகும். இதன் அர்த்தம் பாடுகள், அழிவு, துன்பம். இவ்வார்த்தை பழைய ஏற்பாட்டில் 22 முறை உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதில் நான்கு முறை மட்டுமே இவ்வார்த்தை, “பாடுகள்” என்ற அர்த்தத்தில் மொழி பெயர்க்கப்பட்டிருக்கிறது. ஆறு இடங்களில் “நோய்கள்” என்ற அர்த்தத்திலும் (*(2 ராஜா 1:2, 2 ராஜா 8:8-9, 2 நாளா 16:12, 2 நாளா 21:18,பிர 6:2),* சுமார் 11 இடங்களில் “நோய்கள்” என்ற அர்த்த்த்திலும் (*உபா 7:15; 28:61, 1 ராஜா 17:17, 2 ராஜா 13:14, 2 21:15, 2 நாளா21:19, சங் 41:3, பிர 5:17, ஏசா 38:9, ஓசி 5:13).* குறிப்பிடப்பட்டுள்ளது.

இதில் இருந்து நாம் மனதிலாக்கி கொள்ளலாம், மத்தேயு 8:17 ல் ***"பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு, நம்முடைய நோய்களைச் சுமந்தார்"*** என்ற வார்த்தைகள் உபயோகப்படுத்தப்பட்டிருப்பதன் மூலம், ஏசாயா 53:5 ல் குறிப்பிடப்பட்டுள்ள ***"அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்"*** என்ற வாக்கியம் **"நம்முடைய சரீரப்பிரகாரமான" ஆரோக்கியத்தை** குறிக்கிறது.

*1 பேதுரு 2:24* ல் ***"நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார்"*** என்ற வாக்கியம் உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. அதாவது, *ஏசாயா 53:4* ல் குறிப்பிடப்பட்டுள்ள **"துக்கங்களை"** என்ற வார்த்தையும், *மத் 8:17* ல் குறிப்பிடப்பட்டுள்ள **"நோய்கள்"** என்ற வார்த்தையும், **"பாவங்கள்"** என்று உபயோகப்படுத்தப்பட்டுள்ளது.
இதை மாத்யூ ஹென்றி என்ற வேத பண்டிதர் இவ்வாறு குறிப்பிடுகிறார் " நம்முடைய பாவங்கள் நோய்களை உருவாக்குகின்றன, அந்த நோய்கள் துக்கங்களை உருவாக்குகின்றன. இயேசு கிறிஸ்து தன்மேல் நம் பாவங்களை சுமந்து அதன் மூலம் நம் நோய்களை சுமந்தார்".

இயேசு கிறிஸ்து, நம்முடைய சரீர ஆரோக்கியம் மற்றும் பாவ மன்னிப்புக்கான அனைத்தையும் செய்தார். "இரட்சிப்பு" கிரேக்- ஸோஸோ, என்ற வார்த்தை *மத் 9:22, மாற்கு 5:34, லூக்கா 8:48; யாக் 5:15* ஆகிய இடங்களில் **"சரீர ஆரோக்கியத்தை"** குறிப்பிடுவதாக உபயோகப்படுத்தப்பட்டுள்ளது. வேதாகமத்தில் பல வசனங்கள் நம்முடைய சரீர குணமடைதலை, பாவ மன்னிப்போடு தொடர்பு படுத்தி குறிப்பிடுகின்றன *சங் 103:3, ஏசாயா 53:4-6, 1 பேதுரு 1:24.* பாவமன்னிப்பு எவ்வாறு இரட்சிப்பின் ஒரு முக்கிய பகுதியோ, அவ்வாறே சரீர ஆரோக்கியமும் இரட்சிப்பின் ஒரு முக்கிய பகுதி.

## இயேசுவின் இரத்தமும் ( நமது பஸ்கா ஆட்டுக்குட்டி) நமது பாவ மன்னிப்பும்

### இயேசுவின் இரத்தம்

*1 யோவான் 1:7 .......... அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிக்கும்.*
*எபி 9:12 வெள்ளாட்டுக்கடா, இளங்காளை இவைகளுடைய இரத்தத்தினாலே அல்ல, தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரேதரம் மகா பரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து, நித்திய மீட்பை உண்டுபண்ணினார்.*

பரலோகத்தில் ஒரு உண்மையான **ஆசரிப்பு கூடாரம்** இருப்பதாக வேதாகமம் சொல்லுகிறது. அங்கே இயேசு கிறிஸ்து பிரதான ஆசாரியராக இருப்பதாக சொல்லுகிறது. பூமியில் இருந்த ஆசரிப்பு கூடாரம் இந்த பரலோக கூடாரத்தின் ஒரு நிழல். பூமியில் இருந்த ஆசரிப்பு கூடாரத்தில், வருடத்துக்கு ஒரு முறை, பிரதான ஆசாரியன் இரத்தத்துடன் சென்று தனக்காகவும் இஸ்ரவேல் ஜனத்துக்காகவும் பாவ மன்னிப்பை பெறுவது வழக்கம் *( லேவி 16:14, 23, 37).* இதன் நிஜமான, இயேசு கிறிஸ்து நமக்காக பாவ மன்னிப்பை பெற்ற சம்பவம், எபி *9:12-15* ல் குறிப்பிடப்பட்டுள்ளது.
தேவன் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தை பார்க்கிறார் - கடந்து செல்லுகிறார் = நமது பாவங்களுக்கான மன்னிப்பு.

## திருவிருந்தும் ( அப்பம் ) நமது ஆரோக்கியமும்

*மத் 26:26 அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து, ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, சீஷர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.*

*மாற்கு 14:22 அவர்கள் போஜனம்பண்ணுகையில், இயேசு அப்பத்தை எடுத்து ஆசீர்வதித்து, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது என்னுடைய சரீரமாயிருக்கிறது என்றார்.*
*லூக்கா 22:19 பின்பு அவர் அப்பத்தை எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு, அவர்களுக்குக் கொடுத்து: இது உங்களுக்காகக் கொடுக்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*

*1 கொரி 11:24 ஸ்தோத்திரம்பண்ணி, அதைப் பிட்டு: நீங்கள் வாங்கிப் புசியுங்கள், இது உங்களுக்காகப் பிட்கப்படுகிற என்னுடைய சரீரமாயிருக்கிறது; என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*
*26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

*1 கொரி 10:16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?*
*17 அந்த ஒரே அப்பத்தில் நாமெல்லாரும் பங்குபெறுகிறபடியால், அநேகரான நாம் ஒரே அப்பமும் ஒரே சரீரமுமாயிருக்கிறோம்.*

## நாம் எதனால் திருவிருந்தில் பங்கெடுக்க வேண்டும்?

இயேசு கிறிஸ்து திருவிருந்தை ஆசரித்த போது ***"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்".***

**இயேசுவை நினைவு கூரும்படி.** நினைவு கூருதல் என்பது வேதாகமத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு முக்கிய காரியம் *( 2 பேதுரு 1:13, 3:1 ).* நாம் தேவனுடைய வார்த்தைகளை தியானிக்க வேண்டும் என்று வேதாகமம் சொல்லுகிறது. இஸ்ரவேலருக்கு சொல்லப்பட்டிருக்கும் பண்டிகைகள், ஓய்வு நாள் போன்ற அனைத்தும், தேவன் அவர்களுக்கு செய்ததை அவர்கள் மறக்காமல் நினைவு கூரும்படியாக கட்டளையிடப்பட்டவைதான். *2 பேதுரு 1:12,14, 3:1* ஆகிய வசனங்கள் நாம் தேவனுடைய காரியங்களை **"நினைப்பூட்டி எழுப்பி விடுவதாக"** குறிப்பிடுகின்றன.

## திருவிருந்தில் பங்கெடுப்பதன் மூலம் நாம் என்ன செய்கிறோம்?

*1 கொரி 11:26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*
**"தெரிவிக்கிறீர்கள்"** என்ற வார்தைக்கான எபிரேய பதம் **"நகாட்"** என்பதாகும். இதன் அர்த்தம் - வெளிக்காட்டுதல், விவரித்தல், புகழுதல், அறிவித்தல். இவ்வார்த்தைக்கான கிரேக்க பதம் **"கேற்றகெலோ".** இதன் அர்த்தம் - வாய் மூலமாக ஒரு பயபக்தியான அறிக்கை செய்தல்.

இவ்வார்த்தைதான் "சொல்" என்று *எபிரேயர் 13:8 ல்* சொல்லப்பட்டிருக்கிறது.

*எபிரேயர் 13:8 அந்நாளில் நீ உன் புத்திரனை நோக்கி: நான் எகிப்திலிருந்து புறப்படுகையில், கர்த்தர் எனக்குச் செய்ததற்காக இப்படி நடப்பிக்கப்படுகிறது என்று சொல்.*

"தெரிவிக்கிறீர்கள்" - அறிவிக்கிறோம்: **திருவிருந்தில் பங்கெடுப்பதன் மூலம், இயேசு கிறிஸ்து நமக்காக மரித்தார் என்றும், நாம் அவருக்குள் மரித்தோம் என்றும், அவரது மரணத்தில் இணைக்கப்பட்டதன் மூலம் ஆரோக்கியத்தையும் சமாதானத்தையும் பெற்றுக் கொள்கிறோம் என்றும் பறை சாற்றுகிறோம்.** இவ்வாறு செய்வதன் மூலம் நாம் ஜீவனையும் ஆரோக்கியத்தையும் அவரது மரணத்தில் இருந்தும் உயிர்த்தெழுதலில் இருந்தும்

தொடர்ந்து எடுத்துக்கொள்கிறோம். இதுதான் இயேசுவின் மாம்சத்தை புசித்து அவரது இரத்தத்தை பானம் பண்ணுவதாக *யோவான் 6:53* ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

## திருவிருந்தும் ( திராட்சை ரசம்) நமது பாவ மன்னிப்பும்

***மத் 26:27*** *பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அவர்களுக்குக் கொடுத்து: நீங்கள் எல்லாரும் இதிலே பானம்பண்ணுங்கள்;*

***28*** *இது பாவமன்னிப்புண்டாகும்படி அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*

*மாற்கு 14:23 பின்பு, பாத்திரத்தையும் எடுத்து, ஸ்தோத்திரம்பண்ணி, அதை அவர்களுக்குக் கொடுத்தார். அவர்களெல்லாரும் அதிலே பானம்பண்ணினார்கள்.*

*24 அப்பொழுது அவர் அவர்களை நோக்கி: இது அநேகருக்காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது.*

*லூக்கா 22:20 போஜனம்பண்ணினபின்பு அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் கொடுத்து: இந்தப் பாத்திரம் உங்களுக்காகச் சிந்தப்படுகிற என்னுடைய இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது என்றார்.*

*1 கொரி 10:16 நாம் ஆசீர்வதிக்கிற ஆசீர்வாதத்தின் பாத்திரம் கிறிஸ்துவினுடைய இரத்தத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா? நாம் பிட்கிற அப்பம் கிறிஸ்துவினுடைய சரீரத்தின் ஐக்கியமாயிருக்கிறதல்லவா?*

*1 கொரி 11:25 போஜனம்பண்ணினபின்பு, அவர் அந்தப்படியே பாத்திரத்தையும் எடுத்து: இந்தப் பாத்திரம் என் இரத்தத்தினாலாகிய புதிய உடன்படிக்கையாயிருக்கிறது; நீங்கள் இதைப் பானம்பண்ணும்போதெல்லாம் என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள் என்றார்.*

*26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

( மேலே குறிப்பிடப்பட்டுள்ள **"நினைவு கூருதல்"**, " **தெரிவிக்கிறீர்கள்"** ஆகிய தலைப்பில் உள்ள பகுதிகளை **"இயேசுவின் இரத்தம்"** என்ற அர்த்தத்தில் இங்கே உபயோகிக்கவும்).

இயேசு கிறிஸ்து தன் விலைமதிப்பு இல்லா இரத்தத்தினால் பாவமன்னிப்பையும் மீட்பையும் பெற்று தந்தார் *( எபி 9:22; எபே 1:7 )*. புது உடன்படிக்கையின் மூலமாக, அந்த பாவங்களை ஒரு போதும் நினைவு கூருவது இல்லை என்று வாக்களித்தார் *( எபி 8:12-13; 9:12,14,26; 10:14,14-19).*

### அதனுடன் தன் இரத்தத்தின் மூலமாக மேலும் பல ஆசீர்வாதங்களை தந்தார்... இயேசுவின் இரத்தம்..........

**1.** நம்மை இருளின் அதிகாரத்தில் இருந்து விலைக்கு வாங்கியது *(அப் 20:28; கொலோ1:13-14 ).*

**2.** தேவனுக்கு முன்பாக நம்மை நீதிமான் ஆக்கியது. *( ரோமர் 5:9).*

**3.** நம்மை பரிசுத்தப்படுத்தியது *( எபி 10:10, 14; 13:12 ).*

**4.** நம்மை மீட்டுக்கொண்டது *( எபே 1:7; வெளி 5:9 ).*

**5.** நம்மை தேவனுக்கு சமீபத்தில் கொண்டு வந்தது *(எபே 2:13 ).*

**6.** நம் மனசாட்சியை தூய்மைப்படுத்தியது *( எபி 9:14 ).*

**7.** மகா பரிசுத்த ஸ்தலத்தில் ( தேவனுடைய சந்நதி) பிரவேசிக்கும் தைரியத்தை தந்தது *( எபி 10:19 )*

**8.** எல்லா பாவத்தில் இருந்தும் நம்மை பரிசுத்தப்படுத்தியது *( 1 யோவான் 1:7, வெளி 1:5 ).*

**9.** சாத்தானை மேற்கொள்கிறது *( வெளி 12:11 ).*

நாம் திருவிருந்திதில் பங்கு கொள்வதன் மூலம், இயேசுவின் இரத்தம் நமக்கு செய்திருப்பவற்றையும், இயேசுவின் இரத்தத்தோடு நமக்கு உள்ள ஐக்கியத்தையும் நினைவு கூர்ந்து அவற்றை பறைசாற்றுகிறோம். இப்படி செய்வதன் மூலம் பாவமன்னிப்பின், புது உடன்படிக்கையின் அனைத்து ஆசீர்வாதங்களையும் நாம் தொடர்ந்து எடுத்துக்கொள்கிறோம். இதுதான் யோவான் 6:53 ல் " இயேசுவின் மாம்சத்தை புசித்து அவரது இரத்தத்தை பானம் பண்ணுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

## எப்பொழுது பரிசுத்த ஐக்கியத்தை ஆசரிக்க வேண்டும்

***1 கொரி 11:26*** *ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*

அனுதினமும் இதை ஆசரிக்கலாம் *( அப் 2:42,46 ).* வாரவாரம் அனுசரிக்கலாம் *( அப் 20:7; 1 கொரி 10:17 ).* ஆதி திருச்சபை வாராந்திர சபை கூடி வருதலை தொடங்குதற்கு முன்பாக அனுதினமும் திருவிருந்தை ஆசரித்து வந்தனர். அதன் பிறகு எல்லா ஞாயிற்றுக்கிழமைகளிலும் ஆசரித்து வந்தனர் *( அப் 20: 7; 1 கொரி 16:2 ).*

## திருவிருந்தில் உபயோகிக்கப்படும் பொருட்கள்

திராட்சை ரசம் *(மாற்கு 14:25; லூக்கா 22:18), புளிப்பில்லாத அப்பம் ( மத் 26:17,26; மாற்கு 14:12,22; லூக்கா 22:7,19 ).*

பல கோதுமை மணிகளால் ஆன ஒரே அப்பம், இயேசுவின் சரீரத்தை ( சபையை ) குறிக்கிறது *(1 கொரி 10:17 ).* "புளிப்பு" பாவத்தையும் தீங்கான ஒன்றையும் *( மத் 16:6-12; மாற்கு 8:15-21 ),* மாய்மாலத்தையும் *( லூக்கா 12:1 ),* துர்க்குணம்,பொல்லாப்பு *(1 கொரி 5:8).* அப்பம் பிட்கப்படுவது இயேசு கிரிஸ்துவின் சரீரம், நமது ஆரோக்கியத்துக்காக நொறுக்கப்பட்டதை குறிக்கிறது *( மத் 26:26; ஏசாயா 53:4-5 1 பேதுரு 2:24 ).*

திராட்சை ரசம் நமது பாவமன்னிப்புக்கென்று சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தத்தை குறிக்கிறது *( மத் 26:28; எபே 1:7; கொலோ 1:14-20).* திராட்சை பழங்கள் நசுக்கப்பட்டு பிழியப்படுதல், இயேசுவின் சரீரம் நசுக்கப்பட்டு பிழியப்பட்டதை குறிப்பிடுகிறது.

அப்பமும், திராட்சை ரசமும், இயேசுவின் சரீரமாகவும் இயேசுவின் இரத்தமாகவும் மாறுகிறது என்ற போதனை வேதவசனங்களின் படி தவறானது. இயேசு கிறிஸ்து தன்னைப்பற்றி சில அடையாள எடுத்துக்காட்டுகளை கூறி இருக்கிறார். ( வாசல் - *யோவான் 10:7.* திராட்சை செடி *யோவான் 15:1 ).* அவைகளை அதனால் இயேசு கிறிஸ்து என்று எடுத்துக்கொள்ள முடியாது. திருவிருந்தின் பொருட்களுக்கு என்று ஒரு வல்லமையோ, மகிமையோ, பரிசுத்தமோ கிடையாது. திருவிருந்து என்ற செய்கையும், உபயோகப்படுத்தப்படும் பொருட்களும், ஒரு போதும் இயேசு நமக்காக செய்தவற்றை நினைவு கூருவதற்கு மேலாக உயர்த்தப்படக்கூடாது.

## நன்றி, ஸ்தோத்திரம் செலுத்துதல்

*1 தெச 5:18 எல்லாவற்றிலேயும் ஸ்தோத்திரஞ் செய்யுங்கள்; அப்படிச் செய்வதே கிறிஸ்து இயேசுவுக்குள் உங்களைக் குறித்துத் தேவனுடைய சித்தமாயிருக்கிறது. ( பிலி 4:6; கொலொ 3:17).*

இயேசு கிறிஸ்து, ஸ்தோத்திரம் செலுத்தியதன் மூலமாக ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் பெருகப்பண்ணினார். லாசருவின் கல்லறையிலும், தேவனுக்கு ஸ்தோத்திரம் செலுத்தியே லாசருவை உயிரோடு எழுப்பினார் *( யோவான் 11:41-44 ).*

*1 தீமோ 4:4 தேவன் படைத்ததெல்லாம் நல்லதாயிருக்கிறது; ஸ்தோத்திரத்தோடே ஏற்றுக்கொள்ளப்படுமாகில் ஒன்றும் தள்ளப்படத்தக்கதல்ல.*
*5 அது தேவவசனத்தினாலும் ஜெபத்தினாலும் பரிசுத்தமாக்கப்படும்.*

## அபாத்திரமாய்....

*1 கொரி 11:26 ஆகையால் நீங்கள் இந்த அப்பத்தைப் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணும்போதெல்லாம் கர்த்தர் வருமளவும் அவருடைய மரணத்தைத் தெரிவிக்கிறீர்கள்.*
*27 இப்படியிருக்க, எவன் அபாத்திரமாய்க் கர்த்தருடைய அப்பத்தைப் புசித்து, அவருடைய பாத்திரத்தில் பானம்பண்ணுகிறானோ, அவன் கர்த்தருடைய சரீரத்தையும் இரத்தத்தையும் குறித்துக் குற்றமுள்ளவனாயிருப்பான்.*
*28 எந்த மனுஷனும் தன்னைத்தானே சோதித்தறிந்து, இந்த அப்பத்தில் புசித்து, இந்தப் பாத்திரத்தில் பானம்பண்ணக்கடவன்.*
*29 என்னத்தினாலெனில், அபாத்திரமாய்ப் போஜனபானம்பண்ணுகிறவன், கர்த்தருடைய சரீரம் இன்னதென்று நிதானித்து அறியாததினால், தனக்கு ஆக்கினைத்தீர்ப்பு வரும்படி போஜனபானம் பண்ணுகிறான்.*
*30 இதினிமித்தம், உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர்களுமாயிருக்கிறார்கள்; அநேகர் நித்திரையும் அடைந்திருக்கிறார்கள்.*
*31 நம்மை நாமே நிதானித்து அறிந்தால் நாம் நியாயந்தீர்க்கப்படோம்.*

## 1. கர்த்தருடையை திருவிருந்திலும், பேய்களுடைய விருந்திலும் பங்கு கொள்ளுதல்.

*1 கொரி 10:21* நீங்கள் கர்த்தருடைய பாத்திரத்திலும் பேய்களுடைய பாத்திரத்திலும் பானம் பண்ணக்கூடாதே; நீங்கள் கர்த்தருடைய போஜனபந்திக்கும் பேய்களுடைய போஜனபந்திக்கும் பங்குள்ளவர்களாயிருக்கக்கூடாதே.

**2.** அவ்விசுவாசிகள், மறுபடியும் பிறக்காதவர்கள் பங்குகொள்ளுதல் *( 1 கொரி 10:16; 11 29 ).*

**3.** மறுபடியும் பிறந்திருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு ஆனால் உண்மையில் இரட்சிக்கப்படாதவர்கள் *( 1 கொரி 10:16;11:27).*

**4.** மறுபடியும் பிறந்திருக்கின்ற விசுவாசிகள், ஆனால் இயேசுவின் சரீரம், இரத்தம், நமக்கு அவற்றோடு உள்ள ஐக்கியம், திருவிருந்தின் முக்கியத்துவம், உபயோகம், ஆசீர்வாதங்கள் இவை ஒன்றையும் நிதானித்து அறியாமல் ( தெரியாமல், புரிந்து கொள்ளாமல், உணராமல், விசுவாசிக்காமல்) பங்குகொள்ளுதல் *( 1 கொரி 11:27-30 ).*

திருவிருந்தை ஒரு சடங்காச்சாரமாக கடைபிடிக்காமல், ஆசீர்வாதமாக ஏற்றுக்கொண்டு, ஆரோக்கியமாக, எல்லா ஆசீர்வாதங்களோடு வாழுவோம்.

ஆமென். நீங்கள் ஆசீர்வதிக்கப்பட்டவர்கள்; ஆசீர்வாதமாக வாழுங்கள்.

**Bro D.Vergin kumar**
If you need any clarifications kindly contact me in deeveekumar@yahoo.com
Ph; 25572195, 99663557.

**Resources;** Dakes bible commentary, Andrew Wommack bible commentary, Vine's expository Dictionary of New Testament words, Strong's bible concordance, Mayer's Bible commentary, Robertson's New Testament word pictures, Vincent's Greek New Testament words, Joseph Prince's "The Holy communion", Mathew Henry's Bible commentary, Barnes's Bible

commentary etc…குறிப்பு: தமிழ் வேதாகமத்தில் சில வசனங்கள் சற்று மேலேயோ அல்லது கிழேயோ காணப்படலாம்.

-------------------------------